பக்கங்கள் 23 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 14 வியாழக்கிழமை 26.02.2026 | அதிர்வு 209

## கைவிடப்பட்ட படகில் இருந்து இளம் பெண்ணின் சடலம் மீட்பு!

### பொலிஸார் தீவிர விசாரணை



இரத்மலானை கடற்கரைப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த மீன்பிடிப் படகு ஒன்றிலிருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# சுரேஷ் சலேயின் டிஜிட்டல் தடயங்கள் சல்லடை! பிரதான சூத்திரதாரிகள் யார் என்றும் துருவல்!!



### தடுப்புக்காவலில் கிடுக்கிப்பிடி விசாரணைகள்

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே பயன்படுத்திய கணினிகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் வங்கிக் கணக்குகளை விரிவாக ஆய்வு செய்யப் புலனாய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

2019 ஏப்ரல் 21 இல் 02



# ரணில் - இந்தியத் தூதுவர் கொழும்பில் திடீர் சந்திப்பு

### அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 02

## யாழ். பல்கலையின் துணைவேந்தராக வேல்நம்பி நியமனம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், மார்ச் 25 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 02

# சுரேஷ் சலே கைது உண்மையை கண்டறிவதற்கான ஓர் ஆரம்பம்



### கத்தோலிக்க திருச்சபை வரவேற்பு

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையைக் கத்தோலிக்க திருச்சபை வரவேற்றுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் ஓர் அங்கமாகவே இந்த நடவடிக்கை அமைந்துள்ளது என்றும் கத்தோலிக்க திருச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் குண்டுத் தாக்குதல் சம்பவம் குறித்து முன்னெடுக்கப்பட்டு வரும் விரிவான 02

# உறக்கத்தில் இருந்த குடும்பஸ்தர் கோடரியால் வெட்டிப் படுகொலை!

## கம்பஹாவில் கொடூரம்

கோடரியால் தாக்கப்பட்டு குடும்பஸ்தர் நபர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் நேற்று புதன் கிழமை அதிகாலை கம்பஹா - மல்வத்து ஹிரிபிட்டிய பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக்கொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர் பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இருவருக்கிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இக்கொலை இடம் பெற்றுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தனது வீட்டின் மற்றொரு அறையில் உறங்கிக் கொண்டிருந்தவரைக் கோடரியால் தாக்கி இந்தக் கொடூரக் கொலையைப் புரிந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

---

## சுரேஷ் சலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளின் அடிப்படையில், சுரேஷ் சலே நேற்று பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கைது நடவடிக்கை குறித்து கத்தோலிக்க திருச்சபையின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இந்தக் கைது நடவடிக்கையானது, விசாரணைகள் சரியான திசையில் தொடர்கின்றன என்பதற்கான ஒரு முக்கிய அறிகுறியாகும். எமக்குத் தேவையானது ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியில் மறைந்துள்ள உண்மைகளே தவிர வெறும் கைதுகள் மாத்திரமல்ல. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் முழுமையான நீதி கிடைக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் நடந்து பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அதன் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகளை வெளிக்கொண்டு வர வேண்டும் எனக் கத்தோலிக்க திருச்சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## சுரேஷ் சலேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற தற்கொலைத் குண்டுத் தாக்குதல்களுக்குச் சதி செய்தமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் நேற்று புதன் கிழமை காலை அவர் கைது செய்யப்பட்டார். பேலியகொட பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்குக் காலை 8.10 மணியளவில் அவர் பணிக்குச் சென்று கொண்டிருந்த போதே, விசேட அதிகாரிகள் குழுவினால் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சுரேஷ் சலே, சி.ஐ.டி. தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 72 மணிநேரத் தடுப்புக் காவல் உத்தரவின் அடிப்படையில் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

இத்தாக்குதல் தொடர்பான முக்கிய தகவல்கள் அவருக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததா? தெரிந்திருந்தும் அவற்றை உரிய தரப்பினருக்கு அறிவிக்காமல் மறைத்தாரா? என்பது குறித்து அதிகாரிகள் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

பிரித்தானியாவின் 'சனல்-4' ஆவணப்படத்தில் அஸாத் மௌலானா வெளியிட்ட பரபரப்புத் தகவல்களின் அடிப்படையில், ராஜபக்ஷவினரை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரும் நோக்கில் தவ்ஹீத் ஜமாத் உறுப்பினர்களுடன் இணைந்து சதித் திட்டங்கள் தீட்டப்பட்டதா? என்பது குறித்தும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

ஏற்கனவே இத்தாக்குதல் தொடர்பாக நௌபர் மௌலவி உள்ளிட்ட 25 பேருக்கு எதிராகக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வரும் நிலையில், கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் சி.ஐ.டியினர் சமர்ப்பித்த இரகசிய அறிக்கைகளின் தொடர்ச்சியாகவே இந்த அதிரடி கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சுரேஷ் சலேயின் கைதைத் தொடர்ந்து, இத்தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மேலும் சில முக்கிய மற்றும் பலம்வாய்ந்த நபர்கள் குறித்தும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தற்போது வலைவீசியுள்ளது.

---

## கைவிடப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று புதன்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு - கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில், உயிரிழந்தவர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தப் பெண் மரணமடைந்த விதம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில், இது ஒரு சந்தேகத்துக்குரிய மரணம் எனப் பொலிஸார் கருதுகின்றனர்.

சடலம் மீட்கப்பட்ட இடத்தில் தடயவியல் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மரணத்துக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் கல்கிசை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

---

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒரே அணியின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர். இந்தப் பேச்சு முடிவடைந்தவுடனேயே இந்தியத் தூதுவர் அவரைச் சந்தித்தமை அரசியல் அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்த உத்தியோகபூர்வத் தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. எனினும், தற்போதைய அரசியல் சூழல் மற்றும் இரு தரப்பு உறவுகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். வலிகாமம் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி, தற்போது யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாகப் பணியாற்றி வருகின்றார். கல்வித்துறையிலும் நிர்வாகத் துறையிலும் நீண்டகால அனுபவம் கொண்ட இவர், பல்கலைக்கழக சமூகத்தில் மதிப்புக்குரிய ஒருவராகத் திகழ்கின்றார்.

துணைவேந்தர் பதவிக்காக கடந்த செப்டெம்பர் மாதம் பல்கலைக்கழகப் பதிவாளரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேர்முகத் தேர்வு மற்றும் மதிப்பீடுகளில் அதிக புள்ளிகளைப் பெற்று பேராசிரியர் வேல்நம்பி முதலிடத்தைப் பிடித்திருந்தார்.

குறிப்பாக, கடந்த மூன்று தடவைகளாக இடம்பெற்ற துணைவேந்தர் தேர்தல்களிலும் இவர் முதல் மூன்று இடங்களுக்குள் தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி, பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்படும் மூவரில் ஒருவரைத் துணைவேந்தராக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் பரிந்துரைகளுக்கமைய, ஜனாதிபதி இந்த நியமனத்தை மேற்கொண்டுள்ளார்.





# வடக்கு அபிவிருத்தியில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு மிக அவசியம்

## ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்தல்

வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக்குப் பல்கலைக் கழகங்கள் மாகாணத் திணைக்களங்களுக்குத் தோள்கொடுத்து உதவ வேண்டும் எனவும், இவ்வாறான கூட்டு முயற்சிகளின் ஊடாகவே எதிர்காலத்தில் எமது மாகாணம் சிறப்பானதொரு வளர்ச்சியை எட்ட முடியும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள தொழில்நுட்ப பீடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஆளுநர்,

“நடப்பு ஆண்டில் வடக்கு மாகாணத்துக்குப் பல்வேறு நிதி மூலங்களிலிருந்தும் பெருமளவிலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ளன. இந்த நிதியினூடான அபிவிருத்தித் திட்டங்கள் தரமானதாகவும், உரிய காலவரையறைக்குள்ளும் நிறைவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், எமக்கு ஆளணி வளம், குறிப்பாகத் தொழில்நுட்ப ஆளணி வளத்தில் மிகப் பெரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன. எனவே, இவ்வாறான சவால்களை வெற்றிகொள்ளப் பல்கலைக்கழக சமூகம் எமக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க முடியும்.

இந்த ஆண்டு மாத்திரமன்றி, எதிர்காலத்திலும் இத்தகைய விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வலுவானதொரு பொறிமுறையை நாம் உருவாக்க வேண்டும். குறிப்பாக, தொழில்நுட்ப பீடம் மற்றும் பொறியியல் பீடங்களில் இருந்து வெளியேறிய மாணவர்களையும், இறுதியாண்டில் கல்வி பயிலும் மாணவர்களையும் பயிற்சி அடிப்படையில் நாம் எமது செயற்றிட்டங்களில் இணைத்துக் கொள்ள முடியும்.

எம்மிடமுள்ள மனித வளங்களை உச்சளவில் பயன்படுத்தி மாகாணத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும்.’ – என்று வலியுறுத்தினார்.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பிலும் அவர் விரிவாக விளக்கமளித்தார்.

ஆளுநரின் உரையைத் தொடர்ந்து, ஆளுநரின் ஆலோசனைக் குழு உறுபபினர் கலாநிதி அகிலன் கதிர்காமர் கருத்துத் தெரிவிக்கையில், மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பல்கலைக்கழகம் எவ்வாறு காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும் என்பது குறித்து விரிவாக விளக்கமளித்தார். குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்டுப் பாதியிலேயே கைவிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள், பயன்படுத்தப்படாதுள்ள இயந்திரங்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறைந்த தொழிற்சாலைகளை அவற்றின் ஆரம்ப இலக்கை அடைவதற்கு ஏற்ற வகையில் எவ்வாறு செயற்றிறன் மிக்கதாக மாற்றியமைக்கலாம் என்பது குறித்தும், அதற்குப் பல்கலைக்கழகம் எவ்வகையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியும் என்பது தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து, பல்கலைக் கழக சமூகம் எந்தெந்த விடயங்களில் தமக்குத் தொழில்நுட்ப ரீதியாக உதவ முடியும் என்பது தொடர்பில் வடக்கு மாகாணக் கைத்தொழில் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக விரிவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, அரசின் எண்ணியமயமாக்கல் கொள்கைக்கு அமைவாகத் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த செயற்றிட்டங்களில் பல்கலைக்கழகம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

மேலும், மாகாணத்துக்குப் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் வரும்போது அவற்றின் சாதக, பாதகங்கள் குறித்துப் பகுப்பாய்வு செய்வதற்கும் பல்கலைக்கழகம் பெரிதும் உதவ முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதுடன், ஏனைய சில மாகாணங்களில் மாகாண நிர்வாகத்துடன் இணைந்து இவ்வாறானதொரு சிறப்பான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமையும் இக்கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து விரிவான திறந்த கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இந்த விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன், மாகாணக் கைத்தொழில் திணைக்கள அதிகாரிகள், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடாதிபதி கலாநிதி ரி.கேதீசன், பொறியியல் பீடாதிபதி கலாநிதி கணேஸ்வரன் அனந்தராஜ், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# சட்டத்தின் பிடியிலிருந்து எவரும் தப்பவே முடியாது!

## அர்ஜுன மகேந்திரன் விவகாரத்தில் அரசு கடும் எச்சரிக்கை

மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பிரதான சந்தேகநபரான முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு அழைத்து வருவது ஒரு சிக்கலான செயல்முறை என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அர்ஜுன மகேந்திரனை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதற்காக அரசு தற்போது உயர்மட்ட இராஜதந்திர தலையீடுகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், எனினும் இது ஒரு எளிய நடைமுறை அல்ல என்பதையும் சுட்டிக்காட்டினார். சிங்கப்பூர் அரசின் சட்ட திட்டங்கள் மற்றும் சர்வதேச விதிகளுக்கு உட்பட்டே இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் விளக்கமளித்தார்.

சந்தேகநபர் நாட்டில் இல்லாத போதிலும், அவருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

“அர்ஜுன மகேந்திரனை நாட்டில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தொடரும். அவரை விரைவில் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான இராஜதந்திர முயற்சிகளை நாம் கைவிடவில்லை.” – என்றும் அவர் கூறினார்.

பிணைமுறி மோசடி தொடர்பான குற்றச்சாட்டுகளில் தொடர்புடைய எவரும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்று உறுதியளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, தவறு செய்தவர்கள் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதே அரசின் இறுதி நோக்கம் என்றும் மேலும் தெரிவித்தார்.



# வெலிகமை கடலில் மூழ்கி ஆஸி. பிரஜை பரிதாபப் பலி!

## மனைவியுடன் நீராடியபோது நேர்ந்த விபத்து

கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மதியம் மாத்தறை – வெலிகமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெலேன கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் 76 வயதுடைய ஆஸ்திரேலிய நாட்டுப் பிரஜை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி வெளிநாட்டுப் பிரஜை தனது மனைவியுடன் பெலேன கடலில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து நேர்ந்துள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வெலிகமை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அவன்கார்ட் நிறுவனத்தின் 2 மனுக்களும் மேன்முறையீட்டு நீதிமன்றால் தள்ளுபடி!

## கடற்படைக்குச் சாதகமாகத் தீர்ப்பு

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான ஆயுதக் களஞ்சியங்களை மீண்டும் கடற்படையினரிடமே ஒப்படைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி, அவன்கார்ட் மெரிடைம் செக்யூரிட்டி நிறுவனம் தாக்கல் செய்திருந்த இரண்டு மனுக்களையும் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த அதிரடி உத்தரவைப் பிறப்பித்தது.

பாதுகாப்பு அமைச்சினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு எதிராக அவன்கார்ட் நிறுவனம் மற்றும் அதன் ஊழியர்கள் சிலரால் இந்த ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

குறித்த நிறுவனம் தனது வணிகச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தி வந்த ஆயுதக் களஞ்சியங்களை மீண்டும் அரசு பொறுப்பேற்பதற்கு எடுத்த முடிவை இரத்துச் செய்யுமாறு கோரியே நீதிமன்றில் முறையிடப்பட்டிருந்தது.

இந்த மனுக்களை ஆரம்பக் கட்டத்திலேயே தள்ளுபடி செய்த நீதியரசர்கள், பின்வரும் விடயங்களைச் சுட்டிக் காட்டினர்.

✯ இம் மனுக்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு எவ்வித சட்டபூர்வமான அடிப்படைகளும் இல்லை.

✯ இதன் காரணமாக, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்ப வேண்டிய தேவையே எழவில்லை.

நீதிமன்றின் இந்த உத்தரவின் மூலம் பாதுகாப்பு அமைச்சின் தீர்மானம் சட்டரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்கள் மீதான கடற்படையின் முழுமையான அதிகாரம் மீண்டும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

# இளம் பெண்களின் அலைபேசிகளை ஊடுருவி நிர்வாண வீடியோ கோரிய இளைஞர் சிக்கினார்

## மார்ச் 6 ஆம் திகதி வரை விளக்கமறியல்

இளம் பெண்களின் அலைபேசிகளைச் சட்டவிரோதமாக ஊடுருவி, அவர்களை மிரட்டி நிர்வாண வீடியோக்களைக் கோரி வந்த குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞரை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ்.போதரகம உத்தரவிட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர், நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின் போது பொலிஸ் உதவிப் பரிசோதகர் நீதிமன்றத்தில் முன்வைத்த தகவல்கள் வருமாறு:-

சந்தேகநபர் கடந்த மூன்று வருடங்களாகப் போலி இணைய இணைப்புகளைப் பயன்படுத்தி இளம் பெண்களின் அலைபேசிகளுக்குள் ஊடுருவியுள்ளார். அங்கிருந்து பெண்களின் அந்தரங்கத் தரவுகளைத் தரவிறக்கம் செய்ததோடு, வட்ஸ்அப் ஊடாகத் தொடர்புகொண்டு மேலதிக நிர்வாண வீடியோக்களைக் கோரி மிரட்டியுள்ளார். தனது கோரிக்கைக்கு இணங்காவிட்டால், தன்னிடம் உள்ள வீடியோக்களை இணையத்தில் கசியவிடுவதாகவும் அவர் அச்சுறுத்தியுள்ளார்.



கடந்த 2023 ஆம் ஆண்டு களுத்துறை மற்றும் பாணந்துறை பகுதிகளைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்கள் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே சி.ஐ.டி. விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

சந்தேகநபர் தனது அடையாளத்தை மறைக்க "கண்டறிய முடியாத" தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திய போதிலும், நீதிமன்ற உத்தரவின் பேரில் "பேஸ்புக்" நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அவர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் மனநிலை குறித்து முழுமையான மருத்துவ அறிக்கையைப் பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் இதன்போது உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தும் இளம் பெண்கள் மத்தியில் மிகுந்த எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜெனிவாத் திருவிழா

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 61ஆவது கூட்டத் தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. கடந்த திங்கட்கிழமை 23 ஆம் திகதி ஆரம்பமான இந்த நீண்ட கூட்டத் தொடர் எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பான அறிக்கைகள் மற்றும் விவாதங்கள் எவையும் இந்தக் கூட்டத் தொடரில் இல்லை என்பது தெரிந்ததே. இலங்கை விவகாரம் இந்த அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் இல்லை.

ஏற்கனவே கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை நிலைமை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை மேலும் இரு வருடகாலத்துக்கு நடைமுறைப் படுத்துவதற்கு அப்போது தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான ஐ.நா .மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 63 ஆவது கூட்டத் தொடரிலும், விரிவான அறிக்கை அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 66 ஆவது கூட்டத்தொடரிலும் சமர்ப்பிக்கப்படும்.

ஆகவே இம்முறை நடைபெற்று வரும் 61 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் அறிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்படமாட்டாது என்பதுடன் விவாதங்களும் இடம்பெறா.

அதனால் ஈழத்து அரசியல் தலைகளையோ, பிரமுகர்களையோ இந்த நடப்புக் கூட்டத் தொடரின்போது ஜெனிவாவில் காண முடியாது.

ஆயினும், பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் Jeunesse Etudiante Tamoule எனும் அரச சார்பற்ற அமைப்பினால் நாளை ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பக்க நிகழ்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்பு கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயத்தில் தற்போதைய புதிய தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகள் போல பல வாக்குறுதிகளை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு வழங்கி உள்ள போதிலும், அவை தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எதுவும் களத்தில் - நாட்டில் - இதுவரை முன்னெடுக்கப்படவே இல்லை என்ற உண்மை நிலைவரம் நாளை நடைபெறும் பக்க நிகழ்வில் வலியுறுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தக் கூட்டத்திலும் இலங்கை அரசு சார்பு பிரதிநிதிகள் பங்குபற்றி வழமையான சமாளிப்பு கருத்துக்களை முன்வைப்பார்கள் என்றும் எதிர்பார்க்கலாம்.

கவுன்ஸிலின் இந்த அமர்வில் இலங்கை சார்பில் பங்கேற்கும் ஜெனிவாவுக்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தஸநாயக்க தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர், ஏனைய நாடுகளின் விவகாரங்கள் தொடர்பான விவாதங்களின்போது இலங்கை சார்பில் கருத்துரைப்பர்.

நாளைய பக்க நிகழ்விலும் தேசிய மக்கள் சக்தி அரசைக் காபந்து பண்ண என்ன புளுகுரைப்பார்கள் என்பதைப் பார்த்திருப்போம்.





# வடக்கு நிர்வாகத்தில் டிஜிட்டல் யுகம் ஆரம்பம்

## ஆளுநர் வேதநாயகன் அதிரடி முன்னெடுப்பு

வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம், கற்றல் முகாமைத்துவக் கட்டமைப்பு மற்றும் பயிற்சி முகாமைத்துவக் கட்டமைப்பு ஆகியவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் நேற்று புதன்கிழமை மாலை கிளிநொச்சியிலுள்ள முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவன கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இப்புதிய கட்டமைப்புகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஆளுநர், இது வெறுமனே ஓர் இணையத்தளத்தையோ அல்லது மென்பொருளையோ ஆரம்பித்து வைக்கும் நிகழ்வல்ல எனவும், வடக்கு மாகாண நிர்வாகத்தின் எண்ணிய ஆளுகையின் புதிய யுகத்தின் ஆரம்பம் எனவும் தெரிவித்தார்.

பாரம்பரிய நிர்வாக முறைமைக்கும், எண்ணியமயப்படுத்தப்பட்ட உலகத்தின் எல்லையற்ற சாத்தியக்கூறுகளுக்கும் இடையிலான இடைவெளியை இணைக்கும் ஒரு பாலமாக இத்திட்டம் அமைந்துள்ளமையை அவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய எண்ணியமயமாக்கல் கொள்கையுடன் ஒன்றிணைந்ததாக முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் ஊடாக, தொழில்சார் மேம்பாட்டுக்குத் தடையாக இருக்கும் பௌதிக ரீதியான தடைகள் தகர்க்கப்பட்டுள்ளன என்று குறிப்பிட்ட ஆளுநர், "யாழ்ப்பாணம், கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு என ஒரு அதிகாரி எங்கு கடமையாற்றினாலும், உலகத்தரம் வாய்ந்த பயிற்சி வளங்களை இனி அவர்கள் தமது விரல் நுனியில் பெற்றுக்கொள்ள முடியும். இது ஒரு தொழில்நுட்ப மேம்பாடு என்பதை விட மேலானது. எமது மிக முக்கியமான சொத்தான 'மனித வளத்தின்' மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு மூலோபாய முதலீடாகும். தொழில்நுட்ப அறிவுள்ள, சுறுசுறுப்பான மற்றும் 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ள ஒரு அரச உழைப்பாளர் படையை நாம் இதன்மூலம் உருவாக்கி வருகின்றோம்." – என்றும் தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்த ஆளுநர், "கால ஓட்டத்துக்கு ஏற்ப அரச நிர்வாகத்தில் தேவையான மாற்றங்களைப் புகுத்துவதில் பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) செ.பிரணவநாதன் முன்னிலையில் இருக்கின்றார். அவரது இந்தச் சிறப்பான செயற்பாட்டை நான் மனதாரப் பாராட்டுகின்றேன். அதே போன்று, முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் கிளிநொச்சியில் அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். 'எல்லாமே யாழ்ப்பாணத்தில்தான் அமைய வேண்டும்' என்ற சிந்தனையை நாம் மாற்றியமைக்க வேண்டும்." – என்றும் வலியுறுத்தினார்.

அரசின் எண்ணியமயமாக்கல் கொள்கையூடாக அரச சேவையிலுள்ள தாமதங்கள் மற்றும் 'சிவப்பு நாடா முறைமைக்கு' முற்றுப்புள்ளி வைக்கப்படுவது மட்டுமன்றி, ஊழல் மற்றும் இலஞ்சம் போன்ற சீர்கேடுகளும் முழுமையாக ஒழிக்கப்படும் என்றும் ஆளுநர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இப்புதிய கட்டமைப்புகளை வெறும் 'கருவிகளாக' அல்லது 'கடமைகளாக' மட்டும் பார்க்காது, நிர்வாக மாற்றத்துக்கான வினையூக்கிகளாகக் கருதிச் செயற்படுமாறு அரச அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட ஆளுநர், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்களின் திறனைப் பொறுத்தே அத்தொழில்நுட்பத்தின் வெற்றியும் அமையும் என்றும் வலியுறுத்தினார்.

அத்துடன், மாகாணத்தின் முன்னேற்றத்துக்கு அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பே இயந்திரமாகச் செயற்படுகின்றது எனக் குறிப்பிட்ட அவர், இத்திட்டத்தை நனவாக்குவதற்கு அயராது உழைத்த முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் இணையத்தள அபிவிருத்திக் குழுவினருக்குத் தனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொண்டார்.

நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணியும் பயிற்சியும்) செ.பிரணவநாதன், இந்த இணையக் கட்டமைப்புகளின் உருவாக்கம் மற்றும் அதனூடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் தொடர்பாகத் தெளிவுபடுத்தினார். முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் தனது வரவேற்புரையில், நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக இந்த ஆண்டு கடந்த காலங்களை விட 4 மடங்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன், பிரதிப் பிரதம செயலாளர்கள், முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# சிலாபம் தொடுவாவ கடற்பரப்பில் வெளிநாட்டு சிகரெட்டுகள் மீட்பு!

## இரண்டு பேரைக் கைது செய்த கடற்படை

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கை கடற்படை, கடலோரக் காவல்படை திணைக்களத்துடன் இணைந்து சனிக்கிழமை சிலாபம் மற்றும் தொடுவாவ கடல் பகுதிகளில் ஒரு சிறப்பு கூட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது.

இதன்போது சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருந்த மற்றும் நாட்டுக்குச் சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 992 கிலோ கிராமை விட அதிகமான பீடி இலைகள், ஒரு லட்சத்து 40 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள், ஒரு தொகை பூச்சிக்கொல்லிகள், மற்றும் ஒரு டிங்கி படகு ஆகியவற்றுடன் 02 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



அதன்படி, சிலாபம் மற்றும் தொடுவாவ கடல் பகுதிகளில் கடலோர காவல்படை திணைக்களத்துடன் இணைந்து வடமேற்கு கடற்படையின் இலங்கைக் கடற்படைக் கப்பல் விஜய நடத்திய இந்தச் சிறப்புக் கூட்டு தேடுதல் நடவடிக்கையின் போது, இவை மீட்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பீடி இலைகள், வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சிலாபம் கலால் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.





# சட்டவிரோத உபகரணங்களை பயன்படுத்திய மீனவர் கைது!

(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

சட்டவிரோதமான முறையில் வின்ச் (Winch) இயந்திரங்களைப் பயன்படுத்தி கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட மீனவர் ஒருவர், குறித்த இயந்திரங்கள் பொருத்தப்பட்ட இரண்டு உழவு இயந்திரங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மக்கொன குடாவ மீன்பிடி துறை முகத்துக்கு அருகில் இவ்வாறு வின்ச் இயந்திரங்களைப் பயன்படுத்தி வலைகளை இழுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, களுத்துறை மீன்பிடிப் பரிசோதகர் அலுவலக அதிகாரிகள் குறித்த இடத்துக்குச் சென்று சந்தேக நபரைத் தமது பொறுப்பில் எடுத்து, பாயாகல பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மீன்பிடிப் பரிசோதகர்கள் குறித்த இடத்துக்குச் சென்ற வேளையிலும், சந்தேகநபர் இரண்டு வின்ச் இயந்திரங்களைப் பயன்படுத்தி வலைகளை இழுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பாயாகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர் மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட வின்ச் இயந்திரங்கள் மூலம் முன்னெடுக்கப்படும் கரைவலை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி, மீனவர்கள் குழுவொன்று கடந்த 5 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

அந்தப் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த பெப்ரவரி 13ஆம் திகதி மாலை போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களை ஜனாதிபதி அலுவலகத்துக்கு அழைத்த ஜனாதிபதி, அவர்களுடன் விரிவான பேச்சில் ஈடுபட்டார்.இதன்போது, அனைத்துத் தரப்பின ரும் இணைந்து குறுகிய காலத்துக்குள் கலந்துரையாடல்கள் மூலம் மிகவும் பொருத்தமான தீர்வுத் திட்டங்களை முன்மொழிய இணக்கம் காணப்பட்டது. போராட்டத்தை கைவிடவும்தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலை மீறாது கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்

**மீறினால் அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்படும் என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு**

(அபு அலா)

இறைச்சிக்காக மாடு அறுப்பவர்கள் பொது சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தல்களை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். இதனை மீறிச் செயற்படும் கடை உரிமையாளர்களின் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுவதுடன், பிணைப் பணமும் சபையால் அறவிடப்படும் என்று குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று குச்சவெளி பிரதேச சபையிலும், புல்மோட்டை உப அலுவலகத்திலும் இடம்பெற்றது.

தவிசாளர் ஏ.முபாறக் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் சபையின் எல்லைக்கு உட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகள் அனைத்திலும் சபையால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் மாத்திரமே மாட்டிறைச்சியை விற்பனை செய்யப்பட வேண்டும் என்று தவிசாளர் கண்டிப்பான உத்தரவை பிறப்பித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள், வருமான வரி பரிசோதகர்களும் பங்கேற்றிருந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட விலைகளான, தனி இறைச்சி ஒரு கிலோ – 2 ஆயிரம் ரூபா, முள்ளுடன் கலந்த இறைச்சி ஒரு கிலோ – ஆயிரத்து 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவேண்டும் எனத் தீர்மானம் எட்டப்பட்டது.

# இனவாத, மதவாதமற்ற நாட்டை உருவாக்குவேன் என்று ஜனாதிபதி கூறுவது வெறும் அரசியல் வாண வேடிக்கையே

## அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



(பா.சதீசன்)

ஜனாதிபதி இனவாதமற்ற, மதவாத மற்ற நாட்டை உருவாக்குவேன் என்று கூறுவதெல்லாம் வெறும் அரசியல் வாண வேடிக்கையே என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தையிட்டியில் தமிழர்களின் பூர்வீக காணிகளை படையினர் யுத்த காலப் பகுதியில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததோடு நில்லாது அந்த நிலங்களை நிரந்தரமாகவே ஆக்கிரமிக்கும் நோக்கில் நாட்டின் நடைமுறை சட்டங்களையெல்லாம் மீறி விகாரை கட்டியதோடு தற்போது சட்டவிரோத விகாரையின் பிக்கு "விகாரை அமைந்துள்ள காணியை மீள கொடுக்க மாட்டேன்" எனக் கூறியுள்ளமை நாட்டின் சட்டத்துக்கும் மனித அறத்துக்கும் பௌத்த தர்மத்துக்கும் அதன் போதனைகளுக்கும் எதிரான குற்றமாகும்.

குற்றமெனத் தெரிந்தும் எத்தகைய அச்சமும் இன்றி இவ்வாறு கூறுவதற்கு பின்னால் சிங்கள பௌத்த இயக்க சக்திகளும், அதற்கு துணை இருக்கும் படையினரும், மறைமுக அரசியல் சக்திகளுமே காரணமாகும். இந்தக் கட்டமைப்புக்கு எதிராக மாற்றுக் கருத்தாளர்களும், நீதியை விரும்பும் பௌத தர்களும், அவர்களின் அதி உயர் சமய பீடங்களும் எழாவிடின் நாட்டின் அமைதியை என்றுமே காண முடியாது. தற்போதைய ஜனாதிபதி "இனவாதமற்ற, மதவாதமற்ற நாட்டை உருவாக்குவேன்" என்பதெல்லாம் வெறும் அரசியல் வாண வேடிக்கை வார்த்தைகளாகவே மட்டுமே இருக்கும் என்பதையும் எச்சரிக்கையாக கூற விரும்புகின்றோம்.

சட்டவிரோத விகாரையால் பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸாரின் அடவாடித்தனங்களுக்கு மத்தியில் இரண்டு வருடங்களுக்கு மேலாக அகிம்சை வழியில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் தீர்வுக்கான பல சுற்று பேச்சு நிகழ்ந்த போதும் பலன் கிட்டாத நிலையிலேயே இறுதியில் கடந்த வாரம் சட்டவிரோத விகாரையின் பிக்கு, புத்தசாசன அமைப்பின் அதிகாரிகள் மற்றும் வேறும் அரசியல் அதிகாரிகள் கூடி பேச்சு நடத்தினர். இதன்போது மேற்கண்டவாறு பிக்கு கூறியிருப்பது ஏமாற்றத்தை தருகின்றது. அது மட்டுமல்ல இந்தப் பேச்சுக்கு பாதிக்கப்பட்ட தரப்பினரை அரச தரப்பினர் அழைக்காமல் விட்டது ஏன்? என்பது மக்கள் மத்தியில் எழும் பிரதான கேள்வியாகும்.

தமிழர் தாயகத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுப்பதாகக் கூறும் இன்றைய ஆட்சியாளர்கள், சிங்கள பௌத்த அரச பயங்கரவாதத்தையும், அதன் காவலர்களாக உள்ள படையினரையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் நீண்ட காலம் புரையோடி போயுள்ள தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண நம்பிக்கையை ஊட்டும் முகமாகவும் விகாரையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலை நாட்ட இனியும் தாமதிக்கக்கூடாது என ஆட்சியாளர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

சட்டவிரோத விகாரை பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படாமைக்கு முக்கிய காரணம் சிங்கள பௌத்த ஆதிக்க நிலையாளர்களதும் அவர்களுக்கு துணை நிற்கும் படையினரதும் தன்மான பிரச்சினையாகும். அநீதி நிறைந்த தன்மானப் பிரச்சினையால் ஓர் இன சமூகம் தொடர்ந்து மன உளைச்சலுக்கு உள்ளாகி இன, சமய முரண்பாடு தொடர்ந்தும் கொதி நிலையிலேயே இருக்கும் சூழ்நிலையில் சமாதானம் பேசுவது நடைமுறை சாத்தியமற்ற செயலாகும்.

இது விடயத்தில் மல்வத்த, அஸ்கிரிய மற்றும் அமரபுர பௌத்த தலைமை பீடங்கள் பௌத்த தர்மத்தின் வழி நின்று நாட்டின் தலைமைத்துவங்களுக்கும், பொது மக்களுக்கும் அறிவுரை வழங்குவது காலத்தின் கட்டாயமாகும். அதுவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கும் என்பதோடு சமயங்கள் மீதும் சமய தலைமைத்துவங்கள் மீதும் மக்களுக்கு நம்பிக்கையையும் உருவாக்கும்.

பௌத்த தலைமைப் பீடங்களோடு நாட்டின் ஏனைய சமயங்களின் தலைமைத்துவங்கள் குறிப்பாக தமிழர் தாயகத்தின் சமய தலைமைத்துவங்கள் உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்கின்றோம். தையிட்டிப் பிரச்சினை அரசியல் பிரச்சினையாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில் சமய தலைமைகள் அமைதி நிலையில் இருப்பதோ, தூர நின்று வேடிக்கை பார்ப்பதோ சமய அறநெறிக்கு நலமாக அமையாது என்பதையும் கூறுகின்றோம்.

நாட்டு மக்களின் அமைதிக்கும், சகவாழ்வுக்கும், எதிர்காலம் தொடர்பான நம்பிக்கைக்கும் பாதகமான அரச, பொருளாதார, படை கட்டமைப்பு செயற்பட்ட சூழ்நிலையிலேயே மாற்று சமூகமாக சமயங்கள் தோன்றின என்பது மக்களுடைய நம்பிக்கையாகும். அத்தகைய மாற்று சமூகத்தின் பங்காளிகளாக, மாற்று சமூகத்தின் தலைமைத்துவங்களாக காலத்தின் கடமையை நிறைவேற்றி நீதி சமூகத்தை உருவாக்க செயற்படுகையில் அதற்கு துணை நிற்பது அனைத்து சமயிகளின் கடமையும்பொறுப்புமாகும்.- என்றுள்ளது.

# மட்டு. கிராமியக் குளங்களில் முதலைகளின் நடமாட்டம்!



(ஜதுர்சயன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வட கீழ் பருவப் பெயற்சி மழை வீழ்ச்சி ஓய்ந்திருக்கும் நிலையில் கிராமியக் குளங்களில் முதலமைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள வெல்லாவெளி, கோவில் போரதீவு, பொறுகாமம், ஆகிய பல பகுதிகளில் காணப்படும் கிராமியக் குளங்களில் முதலைகளின் நடமாட்டம் காணப்படுகின்றது.

கடந்த காலங்களிலும் அந்தக் குளங்களில் இவ்வாறு முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டதால் மேய்ச்சலுக்குச் சென்ற ஆடு, மாடுகளை முதலைகள் வேட்டையாடிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு அப்பகுதிக்கு ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டு செல்பவர்கள் தமது பாதுகாப்பு விடயத்தில் அவதானத்துடன் இருக்குமாறு அந்தப் பகுதி சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.



# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பில் மட்டக்களப்பில் கலந்துரையாடல்

(ஜதுர்சயன்)

அரசைப் பாதுகாக்கும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பில் மட்டக்களப்பில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

அரசால் தற்போது புதிதாக முன்மொழியப்பட்டுள்ள அரச பயங்கரவாதத்தில் இருந்து பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் ஊடகவியலாளர்கள், அரச சார்பற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை விழுது நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டி அதன் தலைவர் வடிவேல் சக்திவேல் தலைமையில் மட்டக்களப்பு கல்லடியில் நடைபெற்றது.



புதிதாக முன்மொழியப்பட்டுள்ள அரசாங்கத்தைப் பாதுகாக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு (PSTA) பற்றியும் இது சட்டமாக நிறைவேற்றப்பட்டால் அதன் தாக்கம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

சிரேஸ்ட ஊடகவியலாளர் இலட்சுமணன் தேவஅதிரன், விழுது ஆற்றல் மேம்பாட்டு திட்ட இணைப்பாளர் போன்றோர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

இதன்போர் கலந்துகொண்ட சமூக செயற்பாட்டாளர்கள், அரசால் தற்போதுபுதிதாகமுன்மொழியப்பட்டுள்ள, அரசைப் பாதுகாக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபு (PSTA ) தொடர்பிலும், தற்போது நாட்டில் நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டம் (PTA) தொடர்பிலும் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# அரச போக்குவரத்து சேவை இன்மையால் மக்கள் அவதி!

(மஸ்கெலியா நிருபர்)

டயகம – கண்டி மார்க்கத்தில் சேவையில் ஈடுபட்டு வந்த நாவலப்பிட்டி பஸ் நிலையத்துக்குச் சொந்தமான அரச பஸ் கடந்த இரு தினங்களாக சேவையில் ஈடுபடவில்லை என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த அரச பஸ் சேவைகள் தினமும் அதிகாலை 5 . 30 மணிக்கு டயகம நகரில் இருந்து புறப்பட்டு தலவாக்கலை நாவலப்பிட்டி ஊடாக காலை 10:30 மணியளவில் கண்டி நகரத்தை நோக்கி பயணிக்கும். அதே போல் மீண்டும் மாலை 7 மணிக்கு டயகமவுக்குச் சென்றடையும்.

இந்த பஸ் சேவை இடம்பெறுவதன் காரணமாக காலை வேளையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள், நோயாளிகள் கண்டி கம்பளை பேராதனை நாவலப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள வைத்தியசாலைக்குச் செல்லும் பயனாளிகள் உட்பட பொதுமக்கள் பலரும் பல்வேறு பயன்களை பெற்று வருகின்றனர். எனவே குறித்த பஸ் சேவையை தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளைப் போக்குவரத்து அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டு கொள்கின்றனர்.



இவ்விடயம் தொடர்பில் நாவலப்பிட்டி அரச பஸ் நிலைய அதிகாரியிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, சாரதி பற்றாக்குறை காரணமாக பஸ் சேவையை தொடர்வதில் சிக்கல் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் சமையல் எரிவாயு இல்லை!

## நுகர்வோர் பெரும் திண்டாட்டத்தில்

(பாறுக் ஷிஹான்)

நாடளாவிய ரீதியில் மீண்டும் பாரிய சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் அம்பாறை மாவட்டத்தில் அதன் தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 4 நாள்களுக்கு மேலாக அம்மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர்களை நுகர்வோர்கள் பெற முடியாமல் சிரமப்படுவதை காண முடிகின்றது.

மேலும் எந்தவொரு சமையல் எரிவாயு சிலிண்டர்களும் சில தினங்கள் விநியோகப்படாமையால் பல பகுதிகளிலும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு உணரப்பட்டுள்ளது.



தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களாக அட்டாளைச்சேனை, அக் கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு, மாவடிப் பள்ளி, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, கல்முனை, நாவிதன்வெளி, மருதமுனை, பெரியநீலாவணை பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களின் முன்பாக மணிக்கணக்கில் காத்திருந்து பொதுமக்கள் சமையல் எரிவாயுவை பெற்றுச் செல்கின்றனர்.

அதிலும் எதிர்வரும் நாள்களில் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் என பொது மக்கள் தேவையற்ற விதத்தில் பீதியடைந்து சிலிண்டர்களைக் கொள்வனவு செய்ய நீண்ட நேரம் காத்திருந்து பெற்றுச் செலகின்றனர்.

நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்தும் எரிவாயு பற்றாக்குறை நிலவுவதால் மக்கள் அவதிப்பட்டு வருகின்ற நிலையில் நாட்டில் நிலவும் எரிவாயு பற்றாக்குறை காரணமாக 3900 மெட்ரிக் தொன் லிட்ரோ எரிவாயுவுடனான கப்பல் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நாட்டை வந்தடைந்துள்ளது என்று செய்தி வெளியாகியுள்ளது.

இன்னும் 7600 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் நாட்டுக்கு வரவுள்ளன என்று மற்றுமொரு தகவலும் வெளியாகியுள்ளது.

கடந்த சில நாள்களாக லிற்ரோ, லாஃப் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் நோன்புக் காலத்தில் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



# போலியான மோதிரத்தை வைத்துவிட்டு துணிகரமாகத் தங்க மோதிரம் திருட்டு!

## தலவாக்கலை நகைக் கடையில் சம்பவம்

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ் )

தலவாக்கலை பிரதான நகரில் இயங்கிவரும் தங்க நகைக் கடை ஒன்றில் தங்க மோதிரம் ஒன்று நூதனமாக திருடப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம் பெற்றுள்ளது என்று தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

நகை வாங்குவது போல் கடைக்குள் புகுந்த சந்தேக நபர் நகைகளை பார்த்து கொண்ட கடையின் உரிமையாளரின் கவனத்தை திசைதிருப்பி கையில் இருந்த போலி மோதிரத்தைக் காட்சிப் பெட்டியில் வைத்துள்ளார். அதே சமயம் தங்கை மோதிரத்தை அதில் இருந்து மறைத்துள்ளார்.

பின்னர் வேறு ஒரு தினத்தில் நகை கொள்வனவு செய்வதாக கூறி சென்ற தன் பின்னர் கடையின் உரிமையாளர் நகைகளைப் பார்த்த போதே 50 ஆயிரம் பெறுமதியான மோதிரம் அபகரிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பின்னர் கடையில் இருந்த கண்காணிப்பு கமராவை பரிசோதனை யிட்ட போதே மோதிரம் களவாடப்பட்ட விடயம் தெரியவந்துள்ளது. இது தொடர்பாகக் கடையின் உரி மையாளர் தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தமையை அடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# திறமையாளர்கள் இனங்காணப்பட்டு பதுளையில் சான்றிதழ் வழங்கல்

(பசறை நிருபர்: நடராஜா மலர்வேந்தன்)

ஊவா மாகாண இளைஞர் சேவைகள் அனுசரணையுடன் சான்றிதழ் வழங்கும் விழா பதுளை மாவட்ட செயலக கேட்போர்க்கூடத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அறிவிப்பு, தமிழ் மற்றும் சிங்கள பாரம்பரிய நடனங்கள், நாடகம் உள்ளிட்ட பல்துறை திறமையாளர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், இரு நாள் அறிவிப்புத்துறை பயிற்சிப்பட்டறையில் பங்கேற்று சிறப்பாக பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தினிது சமன் ஹென்னாயக்க கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக அனுஷா கோகுல பங்கேற்றார்.

அத்துடன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், ஊவா மாகாண பணிப்பாளர் ஜனத் லியனகே உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வு கலைநிகழ்ச்சிகளுடன் நிறைவுற்றது.



# தனியார் வைத்தியசாலை உள்ளிட்ட ஒன்பது நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

(கல்முனை நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் பாவனைக்கு உதவாத மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்த தனியார் வைத்தியசாலை உட்பட 9 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு அதிகாரிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இவை கண்டு பிடிக்கப்பட்டன என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொது மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது வியாபார நிலையங்களில் எஸ்.எல்.எஸ். தரம் பொறிக்கப்படாத பொருள்கள், உற்பத்தித் திகதி, உற்பத்தி செய்த இடம், வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை, போலி அல்லது கலப்படம் செய்யப்பட்ட தரம் குறைந்த, பொறிக்கப்பட்ட விலையில் அதிக விலைக்கு விற்பனை செய்தல், காலாவதியான பாவனைக்கு உதவாத உணவுகளை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களை அவதானித்தால் உடனடியாக நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைக்கு அறிவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார்.



# சாய்ந்தமருதில் ரமழான் நோன்பு கால உணவக விசேட களப் பரிசோதனை!

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை சுகாதார பிராந்தியத்திலுள்ள சாய்ந்தமருதில் ரமழான் நோன்பு கால உணவக விசேட அதிரடி களப் பரிசோதனைகள் ஆரம்பமாகியுள்ளன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ஜே.மதன் தலைமையில் நோன்பு காலத்தை முன்னிட்டு ஹோட்டல்கள், உணவு கையாளும் நிலையங்களில் விசேட சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல் அங்காடிகள் சந்தை மற்றும் தயிர் விற்பனை நிலையங்களும் சோதனைக்கு இலக்காகி வருகின்றன.

இந்தப் பரிசோதனைகளின் போது உணவுப் பொருள்களின் தரம், சேமிப்பு முறை சுற்றுப்புறத் தூய்மை, பணியாளர்களின் தனிநபர் சுகாதாரம் உள்ளிட்ட அம்சங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

உணவுகளைச் சுகாதாரமான முறையில் தயாரித்து, சேமித்து, விற்பனை செய்வதற்கான சுகாதார விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன.



இதன்போது மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு உரிய முறையில் அழிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# ஞாயிற்றுகளில் பிரத்தியேக வகுப்புகள் தடைசெய்யப்படவேண்டியது அவசியம்!

## சமய அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு பிரதேசத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிரத்தியேக வகுப்புகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று சமய அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதற்கென வெகுவிரைவில் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடத்தி, பெற்றார் மற்றும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மகஜரை காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் காரைதீவு பிரதேச செயலாளர் ஆகியோரிடம் நேற்று நேரில் சென்று கையளித்தனர்.

காரைதீவு ஆலய அறங்காவலர் ஒன்றியம், இந்து சமய விருத்திச் சங்கம், அனைத்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோரால் இந்தக் கோரிக்கை கையளிக்கப்பட்டது.

காரைதீவு பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஞாயிற்றுக் கிழமைகளில் பிரத்தியேக வகுப்புக்கள் அதிகரித்து காணப்படுவதால் அறநெறிப் பாடசாலைக்கு வரும் மாணவர்களின் வருகை குறைந்து செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆன்மீக சிந்தனை ஒழுக்கம் என்பன எமது சமூகத்திடையே குறைந்து கொண்டு வருகின்றது.

எனவே, இதனைத் தடுத்து முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தர் பிறந்த மண்ணில் ஞாயிறுக்கிழமைகளில் அறநெறி பாடசாலைக்கு வருகைதரும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அறம் ஒழுக்கம் சார்ந்த சமூகத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.



# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் நீண்டகால விடுதிப் பிரச்சினைக்குத் தீர்வு

## உயர் கல்வி அமைச்சின் ஊடாக பிரதமரால் 515 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்,வி.ரி.சகாதேவராஜா)

வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக் கழக வளாகத்தில் கல்வி கற்கும் வெளிப் பிரதேச மாணவர்கள் தங்கி இருந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அளவு போதுமான விடுதி வசதிகள் இன்மையால் மாணவர்கள் அருகில் உள்ள தனியார் தங்கும் இடங்களில் பணம் கொடுத்து தங்கி பெற்று மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.



மாணவர்களின் இந்த அவல நிலை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான கந்தசாமி பிரபு, பிரதமரும், கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய வின் கவனத்துக்குக் கொண்டு சென்று விடுதி ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்துத தெரிவித்தார்.

இந்த நிலையில் தற்போது சுமார் 515 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஒவ்வொரு அறைகளும் தலா 2 மாணவர்கள் தங்கி நிற்கத்தக்கதாக மொத்தமாக 200 அறைகளை கொண்டு அமைய உள்ளன. 400 மாணவர்கள் இதனூடாக நேரடியாகப் பயனடையும் வகையில் குறித்த விடுதிக் கட்டடம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

தூரப் பிரதேச மாணவர்களுக்குப் பெரும் ஆறுதலாக இது அமையும் என்றும் இதற்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளை கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகம் துரிதமாக மேற்கொண்டு வருகிறது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.



# வீதி அபிவிருத்திப் பணிகள் மன்னாரில் ஆரம்பித்து வைப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தலைமையில் ஆரம்பித்து வைப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள எருவிட்டான் கிராமத்தில் 1.5 கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைப்பு பணிகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வீதி புனரமைப்பு பணிகளுக்காக 57.82 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பிரதேச சபைக்கு உட்பட்ட பல்வேறு வீதிகளின் அபிவிருத்தி பணிகள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# கழிவால் நிறைந்து போயுள்ளது தியகலை - கடவலை பகுதிகள்!

## முகம் சுழிக்கின்றனர் மக்கள்

(மஸ்கெலியா நிருபர்)

கினிக்கத்தேன நோட்டன் பகுதியில் உள்ள தியகலை – கடவலைக்கு இடையில் உள்ள பகுதி கடந்த 2016 ஆம் ஆண்டு மிகப்பெரிய மண்சரிவு இடம்பெற்ற நிலையில் கடந்த கால அரசால் இவ்விடம் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

அது மட்டுமின்றி பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகளின் அவசர தேவைக்காக, அம்பேகமுவ பிரதேச சபையால் நீர் குழாய் ஒன்றும் மக்களின் வரிப் பணத்தில் பொருத்தப்பட்டது.

ஆனால் இப்போது கடவலை பகுதியில் இயங்கி வரும் ஒரு குறித்த உணவகத்தால் அந்த நீர் குழாய் உரிமைப்படுத்தப்பட்டு அவர்கள் வசமாக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமின்றி, இந்த நீர் குழாயை மக்கள் பயன்படுத்தி விடுவார்கள் என்ற பயத்தில் அவ்விடத்தில் அந்த உணவகத்தில் ஒதுக்கப்படும் உணவுக் கழிவுகள் மற்றும் பொலித்தீன் கழிவுகளை அங்கு வீசிச் செல்கின்றனர்.

இந்த இடமானது வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள், உள் நாட்டு பயணிகள், சிவனடி பாத மலைக்கு வரும் யாத்திரீகர்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மற்றும் வாகன சாரதிகள் சாப்பிட்டு நீர் அருந்தும் இடமாக உள்ளது.

இப்போது இங்கு வருபவர்கள் இங்கு இருக்கும் குப்பைகளை பார்த்தாலே முகம் சுளிக்கும்படி உள்ளது. இவ்வாறான செயல்களால் அந்தப் பகுதியில் சுற்றுச்சூழல் மாசுடைந்து வருகிறது.

இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள்.

இந்தப் பகுதியில் கொட்டப்பட்டுள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் பிளாஸ்டிக் போத்தல்கள் மழைகாலத்தில் களனி கங்கைக்கோ அல்லது மாகாவெலி கங்கைக்கு சென்றடையும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# கிராமிய பாலங்களது அபிவிருத்தி வேலைத் திட்டம் தொடர்பில் ஆய்வு

(பாறுக் ஷிஹான்)

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் திட்ட பணிப்பாளர் மற்றும் திட்ட பொறியாளர்கள் அடங்கிய குழுவினர் சம்மாந்துறைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

கிராமிய பாலங்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கள நிலவரங்களை ஆய்வு செய்வதற்காக விஜயம் செய்த அவர்களுடன் சம்மாந்துறை பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம். மாஹிர் உள்ளிட்ட குழுவினர் இணைந்து நேரடி கள ஆய்வில் ஈடுபட்டனர்.

இதன்போது, சிறிய பாலங்கள் உள்ளிட்ட பல்வேறு கிராமிய அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்ற நிலை தொடர்பாக ஆய்வுமேற்கொள்ளப்பட்டது. மக்கள் பயன்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பற்றியும் விரிவாக பரிசீலிக்கப்பட்டது.

இந்தத் திட்டங்கள் துரிதமாகவும் தரமான முறையிலும் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது சம்மாந்துறை பிரதேச சபையின் செயலாளர் யூ.எல்.அப்துல் மஜீட், சம்மாந்துறை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.முஸ்தபா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# மருதனார்மடம் சந்தையில் சனிக்கிழமை இலவச நீரிழிவு பரிசோதனை முகாம்!

யாழ். நீரிழிவு கழகமும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனையும் இணைந்து நடத்தும் இலவச நீரிழிவு பரிசோதனை முகாம் மருத னார்மடம் சந்தையில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது.

முன்னாள் மருத்துவ பீட பீடாதிபதி சத்திர சிகிச்சை நிபுணர் டக்டர் எஸ். ரவிராஜ் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நீரிழிவு பரிசோதனை, இரத்த அழுத் தம், உடல் திணிவுச் சுட்டி காணல், வைத்திய ஆலோசனைகள் வழங்கல் என்பன இதில் இடம்பெறவுள் ளன.

இலவசமாக நீரிழிவு கைநூல் வழங்கப்படவுள்ளது. இதில் அனை வரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நீரிழிவு கழகத்தினர் கேட்டுள்ளனர்.

# நூற்றாண்டை தாண்டிய வரலாறான மகத்தான தலைவர் விடைபெற்றார்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் இரங்கல் தெரிவிப்பு

நூற்றாண்டை தாண்டிய வரலா றாக வாழ்ந்த மகத்தான தலைவர் அப்பழுக்கற்ற கம்யூனிசப் போராளி தோழர் இரா நல்லகண்ணு விடை பெற்றார். அவரது இழப்பு ஏற்க முடியாத பேரிழப்பாகும்.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தலைவர் தோழர். க.பிரேமச்சந்திரன் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

இந்திய அரசியல் வரலாற்றிலும் தமிழக அரசியல் வரலாற்றிலும் எமது காலத்தில் வாழ்ந்த அப்பழுக் கற்ற கம்யூனிசப் போராளி தோழர் இரா நல்லகண்ணு மண்ணுலகில் விடைபெற்றார்.



தலைசிறந்த மக்கள் தலைவரான தோழர் இவ்வுலகை நீங்கினார் என் பது கம்யூனிச உலகுக்கு மட்டுமல்ல மக்கள் உரிமைக்காய் போராடும் அத்தனை தேசங்களுக்கும் பேரிழப்பு.

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து இது திவரை எமது மக்களின் போராட் டத்தை ஆதரித்ததோடு தான்சார்ந்த கட்சிக்குள்ளும் எமக்கான ஆதரவுத்த ளத்தை உருவாக்கி எமக்கு பலமாக வும் பாலமாகவும் இருந்தவர் தோழர்.

இன்று நல்லதோர் வழிகாட்டியை இழந்து நிற்கின்ற தமிழ்நாட்டின் தோழர்களுக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை.

ஆயிரத்தில் ஒருவராக வாழ்ந்து மக்களை வழிநடத்தி தனது நூற்றியோ ராவது வயதில் இவ்வுலகை நீத்தார் என்பதால் நூற்றாண்டைத் தாண்டிய வரலாறாக எம்மோடு வாழ்வார் என ஆறுதல் கொள்வோம்.

தோழரின் இழப்பில் துயருறும் அனைத்து தோழர்களோடும் குடும்ப உறவினர்களோடும் நாமும் இணை கின்றோம்.- என்றுள்ளது.

# சிவானந்த நலன்புரி நிலைய ஓராண்டு பூர்த்தி விழா!









(வி.ரி.சகாதேவராஜா)

உலகளாவிய ராமகிருஷ்ண மிஷ னின் கொட்டகலை சிவானந்த நலன்புரி நிலையத்தின் ஓர் ஆண்டு நிறைவு விழா நுவரெலியா கொட்டகலையில் கோலாகலமாக நடைபெற்றது.

விழா மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜி மஹராஜ் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் அக்ஷராத்மானந்த ஜீ கலந்து கொண்டார்.இதன்போது பொதுக்கூட்டம், பாராட்டு நிகழ்வுகள் மற்றும் சிறப்புரைகள் இடம்பெற்றன.



# ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான சத்துணவு வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்!

பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக பிரிவையுடைய, தொண்டைமானாறு தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே/383, கெருடாவில் வடக்கு கிராமசேவையாளர் பிரிவு ஜே/386, கெருடாவில் தெற்கு கிராம சேவையாளர் பிரிவு ஜே/385ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களை சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறு மதியான சத்துணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் நேற்று இவற்றை ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார். மாதாந்தம் இந்த உதவித்திட்டம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# உதைப்பந்தாட்ட வீரர்களின் தேவைகளை கேட்டறிந்தது கொட்டகலை பிரதேச சபை

(மஸ்கெலியா நிருபர்)

கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர்கள் முன்வைத்த பிரேரணைகளுக்கு இணங்க, பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் ராஜமணி பிரசாந்த் தலைமையில் கொட்டகலை உதைப்பந்தாட்ட வீரர்களுடன் சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கொட்டகலை பிரதேச சபையின் உறுப்பினர்கள் சுப்பையா மகேந்திரன், கணபதி கண்ணதாசன், செயலாளர் மற்றும் உதைப்பந்தாட்டக்குழுவின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கொட்டகலை பொது மைதானத்தில் விளையாட்டு வீரர்களுக்கு உரிய வசதிகள் மற்றும் கட்டமைப்புகளை விரைவில் ஏற்படுத்துவதற்கான தீர்மானம் எட்டப்பட்டது.





# தெஹியத்தகண்டி பொலிஸ் நிலையத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான பரிசோதனை

(பாறுக் ஷிஹான்)

தெஹியத்தகண்டி பொலிஸ் நிலையத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான பரிசோதனை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதன் போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் கலா சார நாட்டிய வரவேற்பு, பொலிஸ் மரியாதை, பூ மாலை மற்றும் அணி வகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். பொலிஸ் உத்தியோகத்தர்களின் சுகாதார முறைகள் பொலிஸ் நிலையத்திலுள்ள பௌதீக வள பற்றாக்குறை தொடர்பிலும் ஆராய்ந்தார்.



சீரற்ற காலநிலைக்கு மத்தியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொலிஸாரால் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் சேவைப்பிரிவு நிலையங்கள், சுற்றுச்சூழல், பொலிஸ் உத்தியோகத் தர்களின் தங்குமிட அறைகள், அலு வலகங்கள் என்பவற்றை பார்வையிட்டதுடன் பொலிஸார் பயன்படுத்தும் வாகனங் களையும் பரிசோதனை மேற்கொண்டார்.






# போதைப்பொருள் அச்சுறுத்தலை வலியுறுத்திக் கலந்துரையாடல்

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருள் அச்சுறுத்தலை நிவர்த்தி செய்வதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை வலியுறுத்திய கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.டி.வி. கஸ்தூரியாரச்சி ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு விளக்கங்களை வழங்கினர்.

இதன்போது உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் பொலிஸ் தலைமையக பொறுப்பதிகாரிகள் ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டார்.



# கலப்பட நெய்யில் தயாரிக்கப்பட்ட 20 கோடி லட்டுகள் வழங்கப்பட்டன

## ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றச்சாட்டு

திருப்பதி தேவஸ்தானத்தில் கடந்த ஆட்சியில் 60 லட்சம் லிற்றர் நெய்யில் கலப்படம் செய்து 20 கோடி லட்டு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டன என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு குற்றம்சாட்டினார்.

ஆந்திர பேரவையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜெகன் மோகன் ரெட்டியின் ஆட்சியின் போது நெய்யில் கலப்படம் என்று தெரிந்தே வாங்கியதாக தீவிர குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. இதன் மீது சுமார் 3 மணி நேரம் விவாதம் நடைபெற்றது.

இதில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு உரையாற்றுகையில்,

"கலப்பட நெய் விவகாரத்தில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்புப் புல னாய்வுக் குழு விசாரணையை நடத்தி யது. அக்குழுவினர் விசாரணை நடத்தி, அதிகாரிகள், ஊழியர்கள், நிபுணர்கள் என அனைவரும் சேர்ந்தே இந்த தவறை செய்தனர். ஆதலால் அவர்கள் மீது ஆந்திர அரசு தரப்பில் நடவடிக்கை எடுக்கலாம் என எனக்கு பரிந்துரை செய்தது.

இதனை விசாரிக்கவே ஒரு நபர் விசாரணை கமிஷன் தற்போது அமைக் கப்பட்டுள்ளது. முந்தைய ஆட்சியினர் லட்டு விவகாரத்தில் மட்டுமல்லாது பல விஷயங்களில் தவறிழைத்துள்ளனர். 2019- 24 ஆம் ஆண்டு இடையே மட்டும் முந்தைய அரசு 59.71 லட்சம் லிற்றர் கலப்பட நெய்யை வாங்கி உப யோகித்துள்ளது. இதில் 231.51 கோடி இந்திய ரூபா ஊழல் நடந்துள்ளது.

லட்டு தயாரித்த நெய்யில் விலங்கு களின் கொழுப்பு, மீன் கொழுப்பு ஆகி யவை கலந்திருப்பதாக நானாக கூற வில்லை. என்.டி.டி.பி. கொடுத்த அறிக் கையை ஆதாரமாக கொண்டு அந்த விஷயத்தை வெளியில் கூறினேன். கடவுள்தான் என்னை அப்படி சொல்ல வைத்துள்ளார்." என்று தெரிவித்துள்ளார்.

# ஊடக விவாதங்களில் பங்கேற்க த.வெ.கவினருக்கு கட்டுப்பாடுகள்



கட்சித் தலைமைக் கழகத்தின் அனு மதியின்றி, த.வெ.க. மாநில மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் யாரும் எவ்வித ஊடக விவாதங்களிலும் பங்கேற்கக் கூடாது என அக்கட்சி யின் பொதுசெயலாளர் புஸ்ஸி ஆனந்த் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர் தல் விரைவில் நடைபெற உள்ளது. இதனையொட்டி, அரசியல் கட்சிகள் தீவிரமாக கூட்டணிப் பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலை யில், நிர்வாகிகளால் ஏற்படும் பல்வேறு சர்ச்சைகளை தவிர்க்கும் விதமாக, த.வெ.க. தலைமை புதிய கட்டுப் பாடுகளை விதித்துள்ளது.

இது குறித்து பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தனது எக்ஸ் பக்கத்தில்,

"தலைமைக் கழகத்தின் அனுமதி யின்றி, கழக மாநில மற்றும் மாவட் டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் யாரும் எவ்வித ஊடக விவாதங்க ளிலும் பங்கேற்கக் கூடாது. பொதுவெளி யில் நடத்தப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விவாதங்கள், நேரடிப் பேட்டிகள் மற்றும் யூடியூப் உள்ளிட்ட சமூக ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்குவது உள்ளிட்டவை குறித்து, தலைமைக் கழகத்தின் முன்அனுமதி கண்டிப்பாகப் பெற வேண்டும்.

முன்அனுமதி பெறாமல், எந்த வித மான மாநில அல்லது தேசிய ஊடகத் தளங்களிலும், விவாதங்களிலும் பங்கேற்பதோ அல்லது நேர்காணல் வழங்குவதோ கூடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கி றோம்." என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.



# விஜய் தேவரகொண்டா – ராஷ்மிகா திருமணம் கோலாகலமாக நடந்தது

உதய்பூரில் விஜய் தேவரகொண்டா – ராஷ்மிகா மந்தனா திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

கடந்த சில தினங்களாக உதய்பூரில் விஜய் தேவரகொண்டா – ராஷ்மிகா இருவரும் திருமண வைபவங்கள் நடைபெற்று வந்தன. இதில் இருவரது குடும்பத்தினரும் மற்றும் நெருங்கிய நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். இந்நிலையில் இன்று காலை 10:10 மணிக்கு இருவரது திருமணமும் நடைபெற்றது.

விஜய் தேவரகொண்டா – ராஷ்மிகா திருமணத்துக்கு பிரதமர் மோடி தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார். மேலும், தொழிலதிபர் அம்பானி தனது குடும்பத்தினருடன் இந்த திருமணத்தில் கலந்து கொண்டுள்ளார்.

இந்த திருமணத்தின் புகைப் படங்கள் எதுவுமே இதுவரை வெளியாகவில்லை. விரைவில் அதிகார பூர்வமாக வெளியிடுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

# இந்திய பாரம்பரிய உடையணிந்து மோடியை வரவேற்றார் நெதன்யாகு

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு இந்திய பாரம்பரிய உடையணிந்து மோடியை வரவேற்று அவரை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளார்.

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று இஸ்ரேல் சென்றார். டெல் அவிவ் விமான நிலையத்தில் பிரதமர் மோடியை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கட்டியணைத்து உற்சாகமாக வரவேற்றார். அங்கு இரு நாட்டு தேசிய கீதங்களையும் ராணுவ பேண்ட் குழுவினர் இசைத்தனர். பின்னர், நாடாளுமன்றத்துக்கு இருவரும் சென்றனர்.

இஸ்ரேல் நாடாளுமன்றம் 'நெசட்டில்' பிரதமர் மோடி சிறப்புரை ஆற்றினார். அவர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நுழைந்த போது, 'மோடி.. மோடி' என இஸ்ரேல் எம்.பி.க்கள் உற்சாகமாக கோஷம் எழுப்பி வரவேற்றனர்.

தொடர்ந்து நெதன்யாகு ஏற்பாடு



செய்திருந்த விருந்து நிகழ்ச்சிக்கு பிரதமர் மோடி சென்றார். அப்போது அவரை வரவேற்ற இஸ்ரேல் பிரதமர் இந்திய பாரம்பரிய உடையணிந்திருந்தார். இது மோடியை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது.

நெதன்யாகுவின் இந்த செய்கையானது இந்தியா – இஸ்ரேல் இடையேயான வலுவான பங்களிப்பை உறுதிப்படுத்துவதோடு, இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு, ராஜாங்க உறவுகளைப் பிரதிபலிப்பதாகவும், மோடி – நெதன்யாகுவின் தனிப்பட்ட பிணைப்பை உறுதிப்படுத்துவதாகவும் இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

முன்னதாக, இந்திய உடையணிந்தது பற்றி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் பக்கத்தில்,

"எங்களது விருந்து நிகழ்ச்சிக்கு முன்னதாக நான் எனது நண்பர் பிரதமர் மோடியை இந்திய பாரம்பரிய உடையணிந்து ஆச்சர்யப்படுத்தினேன்," என்று இந்தியில் பதிவிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் மோடி, "அருமை. இந்திய உடைகள் மீதான தங்களுடைய அன்பு, எங்களது நாட்டின் வளமான கலாச்சாரம் மற்றும் மரபுகள் மீதான தங்கள் மரியாதையை பிரதிபலிக்கிறது," என்று எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.



# பிரேசிலில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

பிரேசிலின் மினாஸ் ஜெராய்ஸ் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்துள்ளது.

அனர்த்தம் காரணமாக இன்னும் 21 பேர் காணாமல் போயுள்ளனர் எனவும் மீட்புக் குழுக்கள் காணாமல் போனவர்களை தொடர்ந்து தேடி வருகின்றனர் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அம்மாநிலத்தில் கன மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அந்நாட்டு வானிலை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



பக்கங்கள் - 03


கனடா முரசு

வியாழக்கிழமை 26/02/2026

கேற்றி பெர்ரியுடனான ட்ரூடோவின் காதல் குறித்து மகன் சேவியர் கருத்து



C2▶



# அமெ. - கனடா இடையில் மீண்டும் வர்த்தகப் பேச்சு!

அமெரிக்கா மற்றும் கனடா நாடுகளின் வர்த்தக அதிகாரிகள் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர் என அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜெமிசன் கிரீர் தெரிவித்துள்ளார்.

மேலும், இரு நாடுகளும் வரும் வாரங்களில் நேரடியாக சந்தித்து கலந்துரையாட திட்டமிட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

கனடா முன்வைக்கும் வர்த்தக உடன்பாட்டுக்கான யோசனைகளுக்கு திறந்த மனப்பாங்குடன் இருப்பதாகவும் கிரியர் தெரிவித்தார்.

“எங்களுடன் ஒரு வர்த்தக உடன்பாட்டை எவ்வாறு அமைக்கலாம் என்பது குறித்து அவர்களிடம் சில யோசனைகள் உள்ளன.

அதற்கு நாங்கள் வெளிப்படையாக திறந்த மனப்பாங்குடன் இருக்கிறோம்,” என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.




# கனடாவில் பாடசாலை மீது குண்டுத் தாக்குதல் மிரட்டல்

கனடாவின் லண்டன் நகரில் அமைந்துள்ள முயமசனைபந இடைநிலை பாடசாலை முழு நாளும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் வந்த குண்டு மிரட்டல் மின்னஞ்சல் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகரின் மேற்கு பகுதியிலுள்ள ஒரு பாடசாலைக்கு குண்டு மிரட்டல் உள்ளடங்கிய மின்னஞ்சல் அனுப்பப்பட்டதாக தகவல் கிடைத்ததையடுத்து அதிகாரிகள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றுள்ளனர்.

பொலிஸார் பண்டசாலை கட்டடத்தின் உள்ளும், புறமும் முழுமையான சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

C2▶

# கேற்றி பெர்ரியுடனான ட்ரூடோவின் காதல் குறித்து மகன் சேவியர் கருத்து



கனடாவின் முன்னாள் பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ, பிரபல அமெரிக்கப் பாடகியான கேற்றி பெர்ரி காதல் குறித்த செய்திகள் சமீப காலமாக கவனம் ஈர்த்துவருகின்றன.

இந்நிலையில், கேற்றி பெர்ரியுடனான தன் தந்தையின் காதல் குறித்து முதன்முறையாக மௌனம் கலைத்துள்ளார் ஜஸ்டின் ட்ரூடோவின் மகன்.

கனடாவின் முன்னாள் பிரதமரான ஜஸ்டின்ட்ரூடோ, தன் முன்னாள் மனைவியான சோபியுடன் வாழும்போது, தம் பதியரின் பிள்ளைகள் குறித்து பொதுவாக செய்திகள் வெளியாவதில்லை.

சோபியும் ட்ரூடோவும் விவாகரத்து செய்ததைத் தொடர்ந்து, ட்ரூடோ பிரபல அமெரிக்கப் பாடகியான கேற்றி பெர்ரியைக் காதலித்துவருகிறார்.

இந்நிலையில், சமீபத்தில் ட்ரூடோவின் மகனான சேவியரை பேட்டி கண்டார் சமூக ஊடகப் பிரபலமான G Hobs.

அப்போது அவர், சேவியரிடம் கேற்றி பெர்ரி குறித்து கேள்வி எழுப்பினார்.

G Hobs சேவியரிடம், கேற்றி பெர்ரியை சந்தித்துள்ளீர்களா என கேட்க, அதற்கு, ஆம் என பதிலளித்த சேவியர், 'She's cool, she's nice' என்றும் கூறினார்.

அத்துடன், நாங்கள் இசை குறித்து பல மணி நேரம் பேசினோம், அடுத்து நான் என்ன செய்வது என்பது போன்ற விடயங்கள் குறித்து அவர் எனக்கு ஆலோசனை கூறினார் என்றும் கூறினார் சேவியர்.

சேவியரும் இசைத்துறை சார்ந்தவர் ஆவார். அல்பங்களை வெளியிட்டு வரும் தனது மகனான சேவியரின் காணொலிகளில் ட்ரூடோவும் அவ்வப் போது தலைகாட்டுவதுண்டு.

# போதைப் பொருள்களுடன் இருவர் சட்பரி பெரும்பாகப் பகுதியில் கைது



கனடாவின் சட்பரி பெரும்பாக பகுதியில் முன்னெடுக்கப்பட்ட போதைப் பொருள் கடத்தல் விசாரணையின் போது பெருமளவு கோகைன் மற்றும் ஆயிரக்கணக்கான போதை மருந்து மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 21 ஆம் திகதி விசாரணை நிறைவடைந்த நிலையில், அப்பகுதியில் சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் என சந்தேகிக்கப்பட்ட நபர்களை குறிவைத்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

அவசர பதில் அணியும் மோப்ப நாய் பிரிவினரும் இணைந்து உயர் அபாய வாகனத் தடைச் சோதனை மேற்கொண்டதில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்த விசாரணையின் அடிப்படையில், மார்டின்டேல் வீதியில் அமைந்துள்ள ஒரு குடியிருப்பை சோதனை செய்ய நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு, அங்கு இரண்டாவது நபரும் கைது செய்யப்பட்டார்.

ஒரு வாகனம் மற்றும் குடியிருப்பு ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சுமார் 1,085 கிராம் கோகைன், 46 கிராம் கிராக் கோகைன் மற்றும் 992 ஹைட்ரோமோர்போன் மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருள்களின் சந்தை மதிப்பு சுமார் 150,000 கனேடிய டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின் விளைவாக, 27 வயதுடைய இரு நபர்கள் மீது தலா இரண்டு போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகள் மற்றும் குற்றச் செயலின் மூலம் பெற்ற சொத்துகளை வைத்திருத்தமை போன்ற குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

**கனடாவில் பாடசாலை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் சம்பவ இடத்தில் இருப்பதனால், பாடசாலையை தற்காலிகமாக மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாடசாலையில் நடைபெற இருந்த கைப்பந்து போட்டியுடன் இந்த மிரட்டல் தொடர்புடையதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனால், அந்த போட்டி ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் புதிய திகதியில் நடத்தப்படும் என கூறப்படுகிறது.

ஆனால், இந்த தகவலை பொலிஸ் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.




# ஆல்பர்ட்டா மாகாணம் பிரிவதை எதிர்க்கும் மக்கள்

லிபரல் கட்சியைச் சேர்ந்த மார்க் கார்னி கனடாவின் பிரதமரானதைத் தொடர்ந்து, அவரது கொள்கைகள் ஆல்பர்ட்டாவின் பாரம்பரியக் கொள்கைகளுக்கு நேரெதிராக உள்ளதால், ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரியவேண்டும் என குரல்கள் வலுக்கத் துவங்கியுள்ளன.

இந்நிலையில், கனடாவிலிருந்து ஆல்பர்ட்டா மாகாணம் பிரிவது குறித்து மற்ற மாகாணங்களில் வாழும் கனேடியர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது.

யுபெரள சுநனை ஐளெவவைரவந (ARI) என்னும் அமைப்பு மேற்கொண்ட ஆய்வின் முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன.

ஆய்வின் முடிவுகள், ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரிவது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், அதற்கு எதிராக வாக்களிப்போம் என பெரும்பான்மை கனேடியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

79 சதவிகித கனேடியர்கள் ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரிவதைத் தடுக்கும் வகையில் வாக்களிப்போம் என தெரிவித்துள்ளார்கள்.

ஆல்பர்ட்டா மாகாணம், இயற்கை வளங்கள் நிறைந்த ஒரு மாகாணமாகும்.

ஆனால், ஃபெடரல் அரசுக்கு தாங்கள் தங்கள் வளம் மூலம் பெரிய அளவில் பங்களிப்பைச் செய்தும், பதிலுக்கு அரசு தங்களை சரியாக கவனிப்பதில்லை, தங்கள் கருத்துக்கள் நாடாளுமன்றத்தில் எடுபடவில்லை என்னும் கருத்து ஆல்பர்ட்டா மக்களிடையே நிலவி வருகிறது.

ஆகவே, வளம் நிறைந்த ஆல்பர்ட்டா, கனடாவிலிருந்து பிரிந்து தன்னைத்தான் நிர்வகிக்கவேண்டும் என ஆல்பர்ட்டா மக்களில் ஒரு பிரிவினர் கருதுகிறார்கள்.

ஆனால், எண்ணெய் மற்றும் எரிவாயு வளம் நிறைந்த ஆல்பர்ட்டா மாகாணம் கனடாவிலிருந்து பிரிந்தால், அது கனடாவின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என மற்ற மாகாண மக்கள் கருதுகிறார்கள்.

